# இந்திய ரிசர்வ் வங்கி, சென்னை

ரூபாய் நோட்டுகளை பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்

## கள்ள நோட்டா.... கண்டுபிடிக்க சில சுலபமான வழிகள்




நல்ல நோட்டு




கள்ள நோட்டு

### 1. காகிதம்

பிரத்தியேகமான காகிதம், கூழாக்கப் பட்ட பருத்தியிலிருந்து தயாரிக்கப்பட்டது. தொட்டுப் பார்த்து உணரலாம். எண்ணும்போது 'படபட' வென சத்தம் உண்டாகும்.

நல்ல தரமான சாதாரண காகிதம், எனவே, நோட்டை தொட்டுப் பார்த்து, தடிமனையும், தரத்தையும் வைத்துக் கண்டு பிடித்துவிடலாம்.

### 2. வரிசை எண்கள்

புற ஊதா விளக்கொளியில் ஒளிரும் வண்ணம் ஜொலிக்கும் மையினால் அச்சடிக்கப்பட்டுள்ளது. எண்களுக்கு இடையே உள்ள இடைவெளி ஒரே சீராக இருக்கும். சிவப்பு நிறத்தில் பெரிதாக பளிச்சென்று, தடிமனாக இருக்கும்.




1000 ரூபாய் நோட்டில் மட்டும் வலது மேல் பாகத்தில் கருநீல நிறத்திலும், இடது புறத்தில் கீழ்ப்பகுதியில் சிவப்பு நிறத்திலும் அச்சடிக்கப்பட்டிருக்கிறது.

அநேகமாக வரிசை எண்கள் சிறியதாக, எண்களுக்கிடையே வெவ்வேறு விதமான அளவுகளில் இடை வெளியில் இருக்கலாம். புற ஊதா விளக்கொளியில் ஜொலிக்காது.



## 3. நிறம் மாறும் மை

500, 1000 ரூபாய் நோட்டுகளில் மத்தியில் அச்சிடப்பட்டிருக்கும் மதிப்பு இலக்கமான 500, 1000 பச்சை நிறத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கும். சற்றே சாய்த்துப் பார்த்தால், பச்சை நிறம் நீல நிறமாக மாறித் தெரியும்.

கள்ள நோட்டுகளில் பச்சை நிறம் நீல நிறமாக மாறித் தெரிய வாய்ப்பில்லை.

## 4. பாதுகாப்பு இழை

மகாத்மா காந்தி படத்திற்கு இடப்புறம் இருக்கும் 100, 500, 1000 ரூபாய் நோட்டுகளில் பாதுகாப்பு இழை சாளரம் சாளரமாகத் தெரியும். வெளியில் பாதி தெரிந்தும், உள்ளே பாதி பொதிந்தும் இருக்கும். வெளிச்சத்தில் தூக்கிப் பார்த்தால் ஒரே கோடாகத் தெரியும். பாரத் என்று இந்தியிலும், RBI என்று ஆங்கிலத்திலும் மாறிமாறி அச்சடிக்கப்பட்டிருக்கும். 1000 ரூபாய் நோட்டில் கூடுதலாக மதிப்பிலக்கமான 1000 மும் அச்சடிக்கப் பட்டிருக்கிறது. 2005 க்குப் பின்னர் அச்சடிக்கப்பட்ட நோட்டுகளில், பச்சையாகத் தெரியும் இழை, வெவ்வேறு கோணங்களில், பார்க்கையில் நீல நிறமாகத் தெரியும். புற ஊதா விளக்கொளியில் மஞ்சளாக ஜொலிக்கும். முன்பக்க எழுத்துக்களும் ஜொலிக்கும்.

வெள்ளி நிற பெயிண்ட் ஒட்டப்பட்டிருக்கலாம். வெளிச்சத்தில் தூக்கிப் பார்த்தால் ஒரே கோடாகத் தெரியாது. பாதுகாப்பு இழை போன்ற பொருளை ஒட்டியிருக்கிறார்கள். கறுப்பு கோடு வரைந்து இருப்பார்கள். நோட்டை உன்னிப்பாகப் பார்த்தால் இது தெரியும்.

பாதுகாப்பு இழையில் நிறம் மாறும் தன்மை இருக்காது.

## 5. நீர்க்குறியீடு



ஒளி ஒதுக்க முறையில் மகாத்மா காந்தி உருவம் சினிமா ஸ்லைடு போல் தத்ரூபமாகத் தெரியும். நகலெடுக்க முடியாத பல்திசைக் கோடுகளும், மகாத்மா காந்தி உருவமும் நோட்டை வெளிச்சத்தில் தூக்கிப் பார்க்கையில் தெரியும். காகிதத் தயாரிப்பு நிலையிலேயே, நீர்க்குறியீடும் ஏற்படுத்தப்படுகிறது.



அசலைக் காப்பியெடுக்கும் முயற்சியில் மகாத்மா காந்தி படம் வரையப் படுகிறது. மகாத்மா காந்தி படம் தெளிவாக இல்லாமல் கார்ட்டூன் படம் போல இருக்கலாம். வெளிச்சத்தில் நோட்டைத் தூக்கிப் பார்த்தால், இந்த வித்தியாசத்தை எளிதில் அறியலாம்.